26th July 1962]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The Planning Commission has suggested that a State Planning Board may be set up in this State. This proposal is under the consideration of the Government.

திரு. மீ. கலியாணசுந்தரம் : இந்த ஸ்டேட் ப்ளானிங் போர்டு என்னும் ஸ்தாபனத்தை எந்த அடிப்படையில் அமைப்பதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறது? அதில் உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர்கள் அல்லாதவர்களும் இருப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அம்மாதிரி ஒரு ஸ்டேட் ப்ளானிங் போர்டு அமைக்கவேண்டுமா என்பதே இப்பொழுது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸ்டேட் பிளானிங் போர்டு அமைக்கும் ஆலோசனை ஒருபுறமிருக்க, நமது நிதி இலாகாவிலிருந்த ப்ளானிங் யூனிட் கலைக்கப்பட்டுவிட்டதா? அல்லது அது தொடர்ந்து இயங்குகிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்க அலுவலகத்தில் நிதி இலாகாவில் அந்த யூனிட் இருக்கிறதா, வேறு எந்த இலாகாவில் இருக்கிறதா என்பதல்ல முக்கியம். அந்த யூனிட் எல்லா அப்படியே இருக்கும். அது கவனிக்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மருத்துவ மனை (மொபைல் வான்)

* **683 கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிருஷ்ணகிரி மருத்துவ மனைக்குச் சொந்தமான **Leprosy mobile van** உபயோகிக்கப்படாமல் ஏன் கிருஷ்ணகிரி பிரயாணிகள் தங்கும் விடுதியில் இரண்டு ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : The van referred to in the question does not belong to Government. It is the property of the Hindu Kusht Nivaran Sangh, a private association. The van went out of order and could not be repaired for want of funds.

பாளையங்கோட்டை மருத்துவ மனை

* **684 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா தலைநகர் பெண்கள்-குழந்தைகள் ஆஸ்பத்திரியில் க்ஷயரோக சிகிச்சைக்கு தனி வார்டு இருக்கிறதா?

(இ) இல்லையென்றால், எப்போது ஏற்படுத்தப்படும்?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) No Sir.

(*b*) As there is a Tuberculosis ward in the Headquarters Hospital, High Ground, Tirunelveli, it is not proposed to open a Tuberculosis ward in the Maternity Hospital, Palayamcottai.